



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக வேட்பாளர் தா.மோ.அன்பரசன் அவர்களை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார்கள் உடன் பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், டி.பாபு, ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்ட மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பி.கே.சேகர் பாபு, எழும்பூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தமிழன் பிரசன்னா, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ) மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை

# UDAN திட்டம்: வளர்ச்சிக் கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி !



நாமக்கல், ஏப். 5-

UDAN திட்டத்தின் செயல்பாடு மற்றும் TierII, TierIII நகரங்களில் அதிகரித்து வரும் விமான நிலைய நெரிசல் குறித்தும், விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலையால் UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா? என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் ஹெலிபோர்ட்கள் மற்றும் நீர்வழி விமான தரிப்பிடங்கள் முழுமையாக செயல்படுத்தப்படாததற்கான காரணங்கள் என்ன? நிலம் கையகப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி தாமதங்களை சரி செய்ய அரசு நிர்ணயித்த காலக்கெடு என்ன?

மேலும், TierII மற்றும் Tier III நகரங்களில் உள்ள முக்கிய விமான நிலையங்கள் 85% முதல் 120% வரை தங்களின் திறனை மீறி செயல்பட்டு பயணிகள் நெரிசல் அதிகரித்துள்ளது உண்மையா? என எழுப்பினார். அத்துடன், "விமான சொத்து உரிமைகள் பாது காப்பு சட்டம், 2025" செயல்பாடு என்ன நிலையில் உள்ளது? இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டதிலிருந்து விமான நிறு வனங்களின் குத்தகைச் செலவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு, விமான நிலையங்களில் நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?, சிறிய நகரங்களில் உள்ள விமான சரக்கு நிலையங்களுக்கு 2026 -27 ஆம் ஆண்டிற்கான CCRC நிதி உதவி விவரங்களையும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோகோல், 2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் அமராவதி, தாதியா, பூர்னியா, ரெக்காங் பேயோ மற்றும் சஞ்சோலி உள்ளிட்ட 5 விமான நிலையங்கள் மற்றும் 38 விமானப் பாதைகள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விமான நிலையங்களில் பயணிகள் வரத்து காலநிலை, திருவிழா மற்றும் விடுமுறை காலங்களைப் பொறுத்து மாறுபடும் என்றும், உச்ச நேரங்களில் தற்காலிக நெரிசல் ஏற்படுவது இயல்பானது என்றும் அவர் கூறினார்.

அதே நேரத்தில், பயணிகள் வசதிக்காக விமான நிலைய நிர்வாகங்கள் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் விளக்கினார்.

மேலும், "விமான சொத்து உரிமைகள் பாது காப்பு சட்டம், 2025" தொடர்பான விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் விமான குத்தகைச் செலவுகள் 8% முதல் 10% வரை குறைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது விமான சேவைகளில் போட்டியை அதிகரித்து, பயணிகள் மற்றும் சரக்கு கட்டணங்களை குறைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதனுடன், 2026-27 நிதியாண்டிற்காக AAICLAS நிறுவனத்தின் சர்வதேச சரக்கு சேவைகளை ஆதரிக்க ரூ.30.33 கோடி CCRC நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 151வது வட்டம் லட்சுமி நகர் 40அடி சாலையில் உள்ள தி.மு.க 151வது வட்ட தேர்தல் பணிமனை வட்ட செயலாளர் அ.மோசஸ் தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் எஸ்.அருணாசலம், ச.சங்கர்கனேஷ் எம்.சி., செ.இராமையா, வி.விஜயன், ஆர்.சேகர், கே.முரளி, எம்.சிவா, விமலாசேகர், கே.கண்ணதாசன், கே.குமார், மோ.சுந்தர், சரவணன், முரளிகிருஷ்ணன், பி.கே.சண்முகம், பி.கேந்திரபாகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சைதை தொகுதி கழக வேட்பாளர்

# மா.சுப்பிரமணியனை ஆதரித்து மாற்றுத்திறனாளி அணி சார்பில் பிரச்சார தெருமுனைக் கூட்டம்!

## அணிச் செயலாளர் பேரா. டி.எம்.என்.தீபக் தலைமையில்!

சென்னை, ஏப்.5-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து மாற்றுத்திறனாளி அணி மாநில செயலாளர் பேரா.டி.எம்.என். தீபக் தலைமையில் தொடர் பிரச்சார தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

கூட்டங்கள் நடைபெறும் நாள் மற்றும் நேரம், வட்டங்கள், இடங்கள் விவரம் வருமாறு:-

5-4-2026 - காலை 10 மணி, காலை 11 மணி, பகல் 12 மணி, மதியம் 1 மணி, 139, 139, 139 அ, 139 அ, 1. நியூகாலனி, 2.சேகர் நகர், 3. எத்திராஜ் நகர், 4 ஜோதிராமலிங்கம் நகர்.

6-4-2026 - காலை 10 மணி, காலை 11 மணி, பகல் 12 மணி, மதியம் 1 மணி, 169 அ, 169 அ, 169, 169. 1.அப்பாவு நகர், 2.ஜோதியம்மாள் நகர், 3. வெங்கடாபுரம்,

4. ரெங்கராஜபுரம்.

7-4-2026 - காலை 10 மணி, காலை 11 மணி, பகல் 12 மணி, மதியம் 1 மணி, 140, 140, 140 அ, 140 அ. 1. வாழைத்தோப்பு, 2. ஆதிகேசவ பெருமாள் கோயில் தெரு, 3. கலைஞர் கருணாநிதி தெரு, 4. அரங்கநாதன் சுரங்கப்பாதை.

8-4-2026 - காலை 10 மணி, காலை 11 மணி, பகல் 12 மணி, மதியம் 1 மணி, 170 அ, 170 அ, 170, 170. 1. பொன்னியம்மன் கோயில் தெரு, 2. கலிக்குன்றம், 3. சித்ரா நகர், 4. வரதாபுரம்.

மேற்கண்ட இடங்களில் வட்ட வாரியாக தலா நான்கு இடங்களில் வாக்குச் சேகரிப்பு பிரச்சார தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. எனவே இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் சைதை தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் பிரதிநிதிகள், தோழர்கள், தொண்டர்கள் பங்கேற்று சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சைதை தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தேர்தல் பணிக் குழு தெரிவித்துள்ளது.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

# தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அறிமுக - செயல்வீரர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், ஏப்.5-

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் டாக்டர் ஆர். எஸ். கிருத்திகாதேவி அறிமுகக் கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம், (06.04.2026 - திங்கட்கிழமை) அன்று மாலை 04.00 மணியளவில், மேற்கு தாம்பரம், முடிச்சூர் ரோட்டில் உள்ள தாம்பரம் வட்டார நாடார்கள் சங்க திருமண மண்டபத்தில் எனது (எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ.,) தலைமையில் நடைபெற உள்ளது.

பகுதி கழகச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ் வரவேற்புரையிலும், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், வ.விஜயரங்கன், பொ.சதாசிவம், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஜி.கே.ரவி ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெறும்.

கூட்டத்தில் கழக வேட்பாளர் அவர்களை அறிமுகப்படுத்தி, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், தலைமைத் தீர்மான குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர்கள் என்.மருது கணேஷ், பரிதி இளம் சுருதி, ம.ம.க.மா.து. பொ.செயலாளர் எம்.யாக்கூப், ஆர்.எஸ்.செந்தில்குமார், மா.வை.மகேந்திரன், ப.சாமுவேல் எபிநேசர், ம.செழியன், தா.கிருஷ்ணா, ஏ.பாலாஜி, எஸ்.ஷேக் அப்துல்காதர், எஸ்.கே.ஜாகீர் உசேன், பா.முத்தையன், கி.ராஜா முகமது, எ.அன்பு ஆகியோர்கள், அறிமுகப்படுத்தி, சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கழக செயற்குழு / பொது குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட செயலாளர்கள் / நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி தலைவர்கள் / மன்ற உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் / துணை அமைப்பாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்து கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு,

தனது அறிக்கையில், மாநகர கழகச் செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அவரது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்த நிகழ்வில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக நிர்வாகிகள், தோழர்கள் தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

### வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைக்கிறார்!

# 152வது வட்டத்தில் தேர்தல் பணிமனை!

## வட்டச்செயலாளர் ஜெ.பாஸ்கரன் அறிக்கை!

சென்னை,ஏப்.5-


சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி இன்று (05.04.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணியளவில் 152வது வட்டத்தில் தேர்தல் பணிமனையை திறந்து வைத்த வளசரவாக்கம் கடம்பாடி அம்மன் கோயில் தெரு துவங்கி ஆலப்பாக்கம் சாலை, தேவி அகாடமி சாலை, பாரதி தாசன் தெரு, திருவள்ளுவர் தெரு, காமகோடி நகர் பிரதான சாலை, வெங்கடேச பெருமாள் நகர், ஆஞ்சநேயர் கோயில், மேற்கு காமகோடி நகர், குகன் தெரு, அருணகிரி தெரு, வியாசர் தெரு, திருப்புகழ் தெரு, காமாட்சி நகர், கனகதாரா நகர், ஆற்காடு சாலை, அம்பேத்கர் சாலை, பெரியார் தெரு, கலைஞர் தெரு, அண்ணா தெரு, அம்பேத்கர் சாலை இணைப்பு, P.N.ராமமூர்த்தி தெரு, பெத்தானியா நகர் அனைத்து தெருக்களும், சௌத்ரி நகர் 19வது தெரு, மெஜஸ்டிக் காலனி பிரதான சாலை, மதுரை மீனாட்சி நகர், கந்தன் தெரு, சிங்காரவேலன் தெரு, சௌத்ரி நகர் பிரதான சாலை, அவர் ஏஞ்சல் பள்ளி வழி, சுரேஷ் நகர், கைக்கான்குப்பம் பிள்ளையார் கோயில் தெரு, ஓம் சக்தி நகர், B.L.N.பிரசாத் நகர், பாரதி காலனி அனைக்ஸ், பாரதி காலனி, கங்கையம்மன் கோயில், பாரதியார் தெரு, திருநகர் அனைக்ஸ், ஜானகி நகர், திருநகர், காந்தி நகர், வீரப்பா நகர், வளசரவாக்கம் ஆற்காடு சாலை வரை உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, தொகுதி மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்கொள்கின்றனர்.ஆகவே இந்நிகழ்ச்சிக்கு 152 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), BDAக்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC), வெல்லும் தமிழ்ப் பெண்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள். கழக முன்னோடிகள், கழக தோழர்கள், கழக செயல்வீரர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஜெ.பாஸ்கரன் தனது

அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி
### ஏப்ரல் 5 (2005)



திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.


தமிழக சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை ஆர்.எஸ். சிறீதர்
### ஏப்ரல் 5 (2005)



வட்ட கழக செயலாளராகவும், சைதை பகுதிக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், நிதிக்குழுத் தலைவராகவும், சைதை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுமக்களின் அன்பைப் பெற்று சிறப்பாகப் பணிபுரிந்தவர்.

கழகம் அறிவித்த பெரும்பாலான அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

"கழகம், கடுமையான சோதனைகளை எதிர்கொண்ட காலங்களிலும் சோர்வடையாமல் – கழகத்தின் ரத்தநாளங்களில் ஒன்றாகவே தனது கடமையாற்றியவர். 'உழைக்கும் தேனீயின் உயிர் பிரிந்ததே' என என் உள்ளம் புலம்புகிறது" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**